00009

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பள்ளிக்கல்வி, உயர்சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் - 2021/2022

இறுதிப் பரீட்சை

ESC2316/EPA2816/EPC2816 – முன்பள்ளிகளில் கற்பித்தல் மற்றும் கற்றல் முறைகளும் முகாமைத்துவமும்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 25.06.2023 நேரம்: மு.ப. 9.30 - பி.ப 12.30

- பகுதி ஒன்றிலுள்ள சகல வினாக்களுக்கும் பகுதி இரண்டிலுள்ள வினாக்களுள் யாதேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

பகுதி - I

1. முகாமைத்துவம் என்பதால் கருதப்படுவது யாது? உமது சொந்த மொழிநடையை பயன்படுத்தி விளக்குக.
2. முன்பள்ளிக் கட்டிடமொன்றில் காணப்படவேண்டிய **ஐந்து** (05) பிரிவுகளை எழுதுக.
3. முன்பள்ளியொன்றில் கட்டாயமாக பேணப்படவேண்டிய **ஐந்து** (05) பதிவுகளை பட்டியற்படுத்துக.
4. முன்பள்ளி விளையாட்டு மைதானம் ஒன்றினை அமைக்கும்போது கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் **ஐந்தினைச்** (05) சுருக்கமாகக் கலந்துரையாடுக.
5. முன்பள்ளியில் தினசரி செயற்பாடுகளைத் திட்டமிடும் போது ஆசிரியர் பெற்றுக் கொள்ளும் அனுகூலங்கள் **ஐந்தினைப்** (05) பெயரிடுக.
6. பிள்ளைகளிடத்து முன் - கணித எண்ணக்கருக்களை விருத்தி செய்வதற்கு முன்பள்ளியொன்று கொண்டிருக்க வேண்டிய கற்பித்தல் சாதனங்கள் (Teaching Materials) **ஐந்தினை** (05) எழுதுக.
7. முன்பள்ளியில் பிள்ளைகளை இணங்கப்படுத்துவதற்கு (Adopted) ஆசிரியர் பின்பற்றக் கூடிய **ஐந்து** (05) முறைகளைப் பட்டியலிடுக.
8. முன்பள்ளி பிள்ளைகளின் செயற்பாடுகளைக் குழுவாக்கும் **ஐந்து** (05) முறைகளை எழுதுக.

(5 X 8= 40 புள்ளிகள்)

பகுதி - II

9.

i. கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டிற்கு இடையிலான வேறுபாட்டை விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. இடைநிலை மதிப்பீடு மற்றும் இறுதிநிலை மதிப்பீடு என்பவற்றால் கருதப்படுபவற்றைத் தனித்தனியாக விளக்குக.

(10 புள்ளிகள்)

10.

i. நிதிவளங்கள் என்றால் என்ன? விளக்குக.

(05 புள்ளிகள்)

ii. முன்பள்ளிகளில் நிதிவளத்தின் தேவைப்பாட்டினை விளக்குக.

(05 புள்ளிகள்)

iii. முன்பள்ளியில் நிதிவளங்களை உயர்த்துவதற்கான **மூன்று** (03) வழிகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

11.

i. முன்பள்ளியொன்றை திறம்பட முகாமைத்துவம் செய்வதில் முன்பள்ளி ஆசிரியரின் வகிபங்கினைப் பற்றிக் கலந்துரையாடுக.

(10 புள்ளிகள்)

ii. முன்பள்ளிக் கல்வி தொடர்பாக அரசு மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் வகிபங்கினை விளக்குக.

(10 புள்ளிகள்)

12.

i. முன்பள்ளியொன்றினை விருத்தி செய்வதற்கு சுற்றுக்சூழல் வளங்களை நாம் எவ்வாறு பயன்படுத்தலாம்?

(10 புள்ளிகள்)

ii. இலங்கையில் முன்பள்ளிக் கல்வியில் காணப்படும் தற்கால பிரச்சினைகள் மற்றும் சவால்களைப் பற்றிக் கலந்துரையாடுக.

(10 புள்ளிகள்)

13.

i. முன்பள்ளியொன்றில் நேர முகாமைத்துவம் என்பதால் கருதப்படுவது என்ன?

(10 புள்ளிகள்)

ii. முன்பள்ளியொன்றில் நேர முகாமைத்துவத்தின் போது கவனத்திற் கொள்ளவேண்டிய **மூன்று** (03) காரணிகளை உதாரணங்கள் மூலம் கலந்துரையாடுக.

(14 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமை பெற்றது -